**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 861/2019 |
| நாள் | 07.11.2025 |
| வா.சா.1 | கார்த்திகேயன் |
| வயது | 40 |
| ஊர் | கரூர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என்னுடைய நண்பர் சேகர் என்பவர் இதே பிரதிவாதிகளுக்கு எதிராக கரூர் விரைவு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் காசோலை வழக்கை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி காசோலை வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளித்தேன். மேற்படி சுருக்கு வழக்கு எண். 93/2020–ல் நான் சாட்சியம் அளித்தபோது, 2019ம் வருடம் ரூ.5,00,000/–த்தை ரூ.1.50 வட்டிக்கு கொடுத்ததாக சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். மேற்படி சாட்சி ஒப்புக்கொண்ட சங்கதி ஏற்கனவே இவ்வழக்கில் பி.தசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது. பி.த.சா.ஆ–2ல் எனக்கும், சத்யபிரியா என்பவருக்கும் 2017ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு பேச்சுவார்த்தை இல்லை என்று சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்ட பி.த.சா.ஆ.2 ஆவணத்தில் பக்கம் 4–ல் முதல் பத்தியில் உள்ள பகுதி **பி.த.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதி என்னிடத்தில் உண்மையாகவே கடன் பெறவில்லை என்பதால் தான் என்னால் இவ்வழக்கில் சரியான சாட்சியம் அளிக்கமுடியவில்லை என்றால் சரியல்ல. சத்யபிரியா என்பவர் கடந்த 13.11.2011ம் தேதியன்று எனக்கு எதிராகவும், சேகர் என்கிற பழனிச்சாமி, சாந்தி என்கிற சாந்தகுமாரி,

வி.ஆர்.பாலசுப்ரமணியம், கே.சுப்ரமணியன்(வா.சா.1) ஆகியோர்கள் மீது மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார்கொடுத்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் தான் அந்த புகார்மனு என்றால் சரிதான். அந்த புகார் மனுவின் சான்றிட்ட நகல் **பி.த.சா.ஆ.4** ஆகும். சேகர்என்பவரை பிரதிவாதி தரப்பில் விசாரிப்பதற்கு எனக்கு எதுவும் ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கு பொய் வழக்கு என்பதால் தாவாவில் கோரிய பரிகாரம் சட்டப்படி கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.